O.S. No.61 /2019

04.09.2021

P.W.1- பழனிச்சாமி

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

நான் 10-ம் வகுப்பு படித்துள்ளேன். நான் V.பெருமாள்பட்டியில் வசிக்கிறேன். பிரதிவாதி உசிலம்பட்டியில் வசிக்கிறார். நான் விவசாயம் செய்கிறேன். பிரதிவாதியும், தங்கமாயனும் கிரைய ஒப்பந்த ரத்துப் பத்திரம் பதிவு செய்த போது நான் பத்திர அலுவலகத்தில் இருந்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.4 அதிகாரப் பத்திரத்தில் கண்ட சரத்துக்களை நான் படித்துத் தெரிந்துக் கொண்டேன். வா.சா.ஆ.4-ல் அந்த ஆவணத்தை எழுத எவ்வித பிரதிபிரயோஜனமும் பெற்றுக் கொள்ளவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பிரதிவாதியின் முகவர் துரைப்பாண்டியிடம் தான் ரூ. 3 லட்சம் கொடுத்தேன். வா.சா.ஆ.6 அறிவிப்பு மற்றும் வழக்குரை தயாரிக்கத் தேவையான சங்கதிகளை நான் தான் என் வழக்கறிஞருக்குத் தெரிவித்தேன். பிரதிவாதியிடம் பணம் கொடுத்ததாக நான் வா.சா.ஆ.6-ல் தெரிவிக்கவில்லை, துரைப்பாண்டியிடம் பணம் கொடுத்ததாகவே தெரிவித்துள்ளேன். பிரதிவாதியிடம் பணம் கொடுத்ததாக நான் வழக்குரையில் தெரிவிக்கவில்லை. வா.சா.ஆ.1 பதிவு செய்த போது நான் பிரதிவாதியை பத்திர அலுவலகத்திற்கு அழைக்கவில்லை. முன்பணம் கொடுத்த விபரத்தை நான் பிரதிவாதிக்கு அறிவிப்பு மூலம் தெரிவிக்கவில்லை. எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே நேரடியாக பணம் கொடுக்கல் வாங்கல் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 அதிகாரப் பத்திரம் ரத்து செய்யப்பட்ட பின்பு தான் நான் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் நான் துரைப்பாண்டியை பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். துரைப்பாண்டி இவ்வழக்கில் அவசியத் தரப்பினர் என்றும் அவரை இவ்வழக்கில் சேர்க்காத காரணத்தால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடமிருந்து எவ்வித கிரைய முன்பணமும் பெறாததால் எனக்கு கிரையம் எழுதிக் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 அறிவிப்பு பிரதிவாதிக்கும், துரைப்பாண்டிக்கும் சேர்த்து அனுப்பப்பட்டது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் தொடர்பாக பிரதிவாதியை எப்போதும்

நான் நேரில் சந்தித்துப் பேசவில்லை. வா.சா.ஆ.1-ல் கண்ட சாட்சிகளை என்னால் நீதிமன்றத்தில் விசாரிக்க இயலும். வழக்குச் சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக நானும், துரைப்பாண்டியும் கூட்டு சேர்ந்து வா.சா.ஆ.1ஐ உற்பத்தி செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்குப் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை

ஒம் / பிரேம் ஆனந்த், 04.09.2021
சார்பு நீதபதி,
உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.